சேர்ப்பதை யாரும் தடுக்கக் கூடாது என்ற முறையில் சிலபல முறைகளை வகுத்து, உறுப்பினர்கள் தாராளமாகச் சேர வேண்டும் என்ற அளவிற்கு வைத்திருக்கிறார்கள். அந்த முறையிலே பழைய உறுப்பினர்களோடு, புதிய சட்ட திட்டத்தின்படி புதிய உறுப்பினர்களைச் சேர்க்க குறைந்தது ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் என்று வைத்துத்தான் தர வேண்டும். அதைத்தான் முதலிலே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அதற்கான வாய்ப்பைத் தந்து, அதற்கடுத்தபடியாக அவர்கள் தொடர்ந்து சங்கத்தை நடத்த கால வரையறை வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று புதிய உறுப்பினர்கள் யார், யார், எந்த எந்த அமைப்பிலே சேர விரும்புகிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் தாராளமாக இடம் கொடுக்கும் வகையில், பொறுக்குக் குழுவின் எண்ணத்தை நிறைவேற்றுகிற அளவிற்கு வாய்புத் தர வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். அவர்கள் சொல்லுவது மாதிரி ஆலோசனைக் குழு நியமிப்பதைக் குறித்து அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை. அதைப்பற்றித் தனியாகத்தான் ஆலோசிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 123 முதல் 127 முடிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

தமிழகப் பேருந்துக் கழக தொழில்நுட்பக் கல்லூரி.

128—(* வினா எண் 2884) **திரு. மா. சின்னராசு மற்றும் திரு. க. சோலைராசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பேருந்துக் கழகங்களின் மூலம் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி என்னுமிடத்தில் போக்குவரத்துக் **கழகங்கள்**

1987 மார்ச் 23]

நிதியுதவியுடன் சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒரு தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) துவங்க அரசின் அனுமதி கோரியுள்ளது. அரசின் அனுமதி கிடைத்தால் துவக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஈரோடு நகரில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற கல்லூரி இரண்டாவது தொழில் நுட்பக் கல்லூரியா? அது சுயநிதிக் கல்லூரி என்ற அடிப்படையில் அமைக்கப்படுமா அல்லது அரசு நிதியுதவியோடு உதவி பெறுகிற கல்லூரியாக அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆய்வில் இருக்கிறது. ஏற்கெனவே அமைக்கப்பட்டிருப்பது இன்ஜினியரிங் கல்லூரி. இப்போது திட்டமிடப்பட்டிருப்பது பாலிடெக்னிக். இப்போது இருக்கின்ற நிலையிலே பாலிடெக்னிக் அமைப்பதைவிட ஐ.டி.ஐ. அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்ற ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அது குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. அனுமதி தர வேண்டுமென்று அரசுக்கு எழுதியிருக்கிறோம். அந்த அனுமதியைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் உள்ள பொறியியல் கல்லூரியில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது? அவர்களுக்கு வழங்கப்படுகிற வேறு சிறப்புச் சலுகைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தொழிலாளிகள் தங்களுடைய பங்குத் தொகையாக அந்தக் கல்லூரியை நடத்துவதற்குப் பணம் செலுத்தியிருக்கிற காரணத்தால் 40 சதவீதம் அந்தத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் அவர்கள் கல்லூரியில் சேர்ந்த

பின்பு தனிப்பட்ட முறையிலே தொழிலாளர்களுடைய குழந்தைகள் என்ற வகையில் சலுகைகள் அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காரணம் அங்கே சேரக்கூடியவர்களை எல்லாம் சமமாகப் பாவிக்க வேண்டுமென்று அந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் அவர்களுக்கென்று சில சலுகைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அது பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் பேருந்துக் கழகங்களின் மூலமாக எத்தனை கல்லூரிகள் நடைபெறுகின்றன? மேலும், பேருந்துக் கழகங்களின் மூலமாக மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, கல்லூரி என்ற வகையிலே இன்ஜினியரிங் கல்லூரி மாத்திரம்தான் துவக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்கள் ஐ.டி.ஐ.-க்களை நடத்திக்கொண்டிருக்கின்றன: மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே துவக்கியாகி விட்டது. அதற்கான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு, இப்போது கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கான கட்டிடங்கள் கட்ட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கும் திருச்சி மாநகரில் தீரன் போக்குவரத்துக் கழகத்தின் தொழிலாளர்கள் சுய நிதிக்குப் பங்குத் தொகை கட்டத் தயாராக இருக்கும் பட்சத்தில், ஒரு ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் திருச்சிக்குத் தர முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, திருச்சி ஒரு நல்ல வளர்ந்த நகரம். ஏற்கெனவே அங்கே கல்லூரிகள், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்குகள் எல்லாம் இருக்கின்றன:

1987 மார்ச் 23]

எனவே இன்னும் ஒன்று அங்கே அவசியமில்லை என்று நினைக்கிறேன். போக்குவரத்துக் கழகம் அங்கே ஐ.டி.ஐ. நடத்துகிறது. எனவே புதிதாகத் துவக்க அவசியம் ஏற்படாது.

திரு. கூடலூர் இ. வி. வேலு : பேரவைத் தலைவரவர்களே, அனைத்து மாவட்டங்களிலும்—ஈரோடு, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் துவக்கியிருக்கிறதென்று சொன்னார்கள். போக்குவரத்துக்கழகங்களிலேயே அதிக லாபம் ஈட்டுவது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்தான். ஆனால் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் இல்லை. எனவே அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு முன்னுரிமை அளித்து, விழுப்புரம், திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் இன்ஜினியரிங் காலேஜ் அல்லது ஐ.டி.ஐ. துவக்க அரசு முன்வருமா ? அப்படி ஒரு பரிசீலனை அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி ஒரு பரிசீலனை இல்லை. அதற்குக் காரணம், இது சென்னைக்கு அருகாமையில் இருக்கிறது. சென்னையில் எல்லாம் இருப்பதால், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஐ.டி.ஐ. அங்கே இருக்கிறது. பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஐ.டி.ஐ. துவக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அப்படி இல்லை என்றால் அதைத் துவக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வி; யாராவது கேட்பார்கள் என்று பார்த்தேன். ஆதலால் நானே அமைச்சரைக் கேட்கிறேன். என்னுடைய தொகுதியில் இந்த ஆண்டே துவக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.